REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 29உ புதன் (13—7—55) ★ ✶ வெளியீடு: ஆனி 30உ வியாழன் (14—7—55) [இதழ் 25

ஒரு லட்சம் 'இராம தூதுவர்கள்' ஏற்றுமதி !

அடுத்த ஐந்து ஆண்டு காலத்திற்குள், ஆண்டொன்றுக்கு 1 லட்சம் வீதம் 'இராம தூதுவர்'களை (குரங்குகள்) ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

குரங்கு ஏற்றுமதியினல் இந்திய சர்க்கார் ஏராளமான 'டாலர்' சம்பாதிக்க முடிகிறதாம்!

மேற்குறிப்பிட்டுள்ளபடி, 5 ஆண்டு ஏற்றுமதி முடிவுற்ற பின்னர், மீண்டும் தொடர்ந்து 8 ஆண்டுகளுக்கு 2½ லட்சம் குரங்குகள் வீதம் அனுப்பப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

'பள்ளிகளில் திரு. வி. க. படத்தைத் திறக்காதே'

அவருடைய பெயரால் ஒரு பள்ளியைத் திறக்கும் நேரத்திலா இத்திருக்கூத்து?

ஸ்தலஸ்தாபனங்களுக்கு சென்னை அரசாங்கத்தின் புதிய கட்டளை!

"சமீபத்தில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருமழபாடி உயர்நிலைப் பள்ளியில், தமிழ் மன்றத்தார், திரு. வி. க. -வின் படத்தைத் திறந்துவைக்க மாவட்டக் கழகத்தாரின் ஒப்புதலைக் கேட்டிருந்தனர். அவர்கள், அதற்கு நேரடி பதில் தராது, அந்தக் கடிதத்தை சென்னை அரசியலாருக்கு அனுப்பிவைத்தனர்;

"இப்போது சென்னை அரசியலாரே தமிழ்ப் பெரியார் திரு. வி. க. -வின் படத்தைத் திறப்பதற்கு அனுமதி மறுத்திருப்பதோடுகூட, இந்த உத்தரவுப் பிரதியை மாவட்டத்திலுள்ள அத்தனை பள்ளிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளனர்; அதாவது, ஒருவேளை, வேறு யாரும் இந்த அடாத செயலைச் செய்துவிட்டால் என்ன செய்வது என்று கருதிப் போலும்!

"நாம் இருப்பது தமிழ் நாடு; இங்கு நடைபெறுவது பச்சைத் தமிழன் ஆட்சி! இதில், தமிழ்ப் பெரியார்—எல்லாருக்கும் நல்லவராக வாழ்ந்த ஒரு தமிழ்த் தலைவரின்—படம் திறப்பதற்குத் தடை!

"இது, தமிழ் நாட்டைத் தவிர வேறு எங்காவது நடைபெறுமா? சமீப காலமாக தமிழன் நாள்தோறும் வேதனைப்படக் கூடிய செய்திகளாக அறிகிறன். அவைகளில் இதுவும் ஒன்று."

—இவ்வாறு, திருச்சி ஆர். நாகசுந்தரம் என்பவர், 12—7—55 'தமிழ் நாடு' இதழின் அஞ்சல் பகுதியில் எழுதியுள்ளார்.

குறிப்பு:—"தமிழ்நாட்டிற்குப் பெருந் தொண்டுகள் பல புரிந்த திரு. வி. க. அவர்களை நினைவுபடுத்திக் கொள்வதற்கான செயலில் ரூ. 12,000 மட்டுமே எங்களால் திரட்ட முடிந்தமை குறித்து நாங்கள் வெகுவாக வருந்துகிறோம்;

"தாராளமான நிதி உதவியின் மூலம், திரு. வி. க. அவர்கள்மீது தாங்கள் கொண்டுள்ள பற்றுதலையும், மரியாதையையும் பொது மக்களுக்கு எடுத்துக்காட்டுவதில் ஒவ்வொருவருக்கும் வேண்டிய அளவு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன," என்று முதலமைச்சர் காமராசர், சென்னை ஷெனாய் நகரில், திரு வி. க. பள்ளித் திறப்பு விழாவில் பேசுகையில் கூறியுள்ளார்.

திரு. வி. க. அவர்கள் உருவப்படத்தைத் திறந்து வைத்து, அமைச்சர் பக்தவத்சலம் பேசுகையில், பெருந்தலைவரான திரு. வி. க. அவர்களின் உயரிய கருத்துக்களைத் தங்கள் வாழ்க்கை நடைமுறைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக்கொள்வர் என தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

"தமிழ் மொழி இந்த நாட்டில் வாழுங்காலம் வரை பெரியார் திரு. வி. க. அவர்கள் நாட்டு மக்களின் உள்ளங்களில் இருப்பார்; அதுபோலவே, தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்களை மக்கள் நினைவுபடுத்திக்கொண்டு, அவர்தம் மேலான கருத்துக்களை பின்பற்றிச் செல்லும் காலம் வரையிலும் தமிழ் மொழியும் வாழும்; திரு. வி. க. அவர்களின் கருத்தோவியங்களையும், நூல்களையும் படிப்பதின் மூலம் மாணவர்களும், ஆசிரியர்களும் தமிழ் மொழியை சிறப்பிக்க வேண்டும்," என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம், அதே விழாவில் பேசுகையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிலமற்ற ஏழைகளுக்கு தென்னந் தோப்புகள்!

இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை, நிலமற்ற ஏழை கிராமவாசிகளுக்கு வினியோகிப்பதற்காக 200 ஏகர் பரப்பளவுள்ள தம்முடைய சொந்த தென்னந் தோப்பு ஒன்றை இலங்கை சர்க்காருக்கு இலவசமாக வழங்கியுள்ளாராம்.

அப்துல் கபார்கான் நடமாட்டத் தடை ரத்து!

எல்லைப்புற முதலமைச்சர் தாராளத்தின் விளைவு

கராச்சி, ஜுலை 12—

"கான் அப்துல் கபார்கானைப் பொறுத்தவரையில், அவருடைய வழியில் நான் தடையாக இருக்க மாட்டேன்; அது, அவருடைய மாநிலம்; அங்கு வர அவர் எப்பொழுது விரும்பினாலும் வரவேற்கப்படுவார்."

இவ்வாறு, எல்லைப்புற முதல் மந்திரி, சர்தார் ரஷீத், உரிமை மசோதா பற்றி விவாதிக்கும்பொழுது குறிப்பிட்டார்.

இக்கருத்தை அறிந்ததும், பாகிஸ்தான் உள்நாட்டு அமைச்சரான இஸ்கந்தர் மிர்சா, கபார்கான் அவர்களின் நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டிருந்தத் தடை ரத்து செய்யப்படுகிறது என்ற அறிவிப்பை, அரசியல் ஆக்க மன்றத்தில் அறிவித்தார்.

அரசியல் ஆக்க மன்றக் கூட்டம் முடிந்து, உறுப்பினர்கள் வெளியேறும்பொழுது, எல்லைப்புற அரசாங்க போலீஸ் தலைமை அதிகாரியை அழைத்து தடை நீக்கக் கட்டளையை உடனடியாக செயலாற்றுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு, மிர்சா உத்தரவிட்டார்.

எல்லைப்புற முதல் மந்திரி 'தனக்குத் தடை இல்லை' என அறிவித்து வாய்மூடுமுன், தடையை நீக்கிவிட்டதாக உள்நாட்டு மந்திரி மிர்சா அறிவித்தது, உறுப்பினர்களுக்கு பேராச்சரியத்தைக் கொடுத்துவிட்டது. மந்திரியின் அறிவிப்பை உறுப்பினர்கள் பேராரவாரம் செய்து வரவேற்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—19/55

ஜுலை 15:

மும்முனைப் போராட்ட நினைவு நாள்!

★

வரும் ஜுலை 15-ஆம் நாளை தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்ட நினைவு நாளாக எல்லாக் கிளைக் கழகங்களும் கொண்டாடுமாக!

★ தென்னாட்டவரை அடிக்கடி அலட்சியப்படுத்திப் பேசிய பண்டித நேருவுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்கவும், வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை அறிவிக்கவும் நடத்தப்பட்ட

இரயில் நிறுத்தப் போராட்டம்;

★ ஆச்சாரியாரின் ஆகாத ஆரம்பக் கல்வித் திட்டத்தை அகற்ற வேண்டும் என்று வற்புறுத்த நடத்தப்பட்ட

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வி எதிர்ப்பு மறியல் போராட்டம்;

★ வடநாட்டு அரசியல் ஆதிக்கம்—முதலாளித்துவ ஆதிக்கம்—மொழி ஆதிக்கம் ஆகியவற்றின் அறிகுறியாக இருந்துவரும் டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையப் பெயரை அந்த இடத்தின் பெயரான கல்லக்குடி என்று மாற்றுவதன் மூலம், மேற்கண்ட ஆதிக்கங்களை எதிர்க்கும் சக்தி தென்னாட்டில்—திராவிடத்தில் உருவாகிறது என்பதை இந்திய அரசியலாருக்கு உணர்த்தவும், வட நாட்டு ஆதிக்கம் அகல வேண்டும் என்ற உணர்ச்சியை திராவிட மக்களுக்கு ஊட்டவும் நடத்தப்பட்ட

டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம்

ஆகிய மூன்று போராட்டங்களும் மூன்று முனைகளில் 1953 ஜுலை 15-ஆம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டன.

அந்தப் போராட்டங்களின் மூலம் பெற்ற வெற்றிகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு நினைவுபடுத்தவும், பெற வேண்டிய வெற்றிகள் குறித்துப் பொதுமக்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இவ்வாண்டும் சென்ற ஆண்டைப்போலவே ஜுலை 15-ஆம் நாளை கழகத் தோழர்கள் அமைதியான முறையில், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றி ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டம் கூட்டுதல், துண்டு அறிக்கை வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டு கொண்டாடுவார்களாக!

ஜுலை 15-ஆம் நாள், திருச்சி மாவட்டக் கழகம் தொண்டர் அணி ஒன்று அமைத்து, டால்மியாபுர இரயில்வே நிலையப் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்று அச்சிட்ட தாளை, அமைதியான முறையில், ஊர்வலமாகச் சென்று ஒட்டி, தி. மு. கழகத்தின் கோரிக்கையை இந்திய அரசியலாருக்கும், பொதுமக்களுக்கும் உணர்த்தும்.

"அறிவகம்," சென்னை. 6—7—1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★

இரு பிரதமர்கள் நம்பிக்கை!

உலக அபாயம் நீங்குமா?

"இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்வதாலும், பெரும் பெரும் வல்லரசுகளுடன் கூட்டுச் சேர்ந்துவிடுவதாலும் மட்டுமே உலகில் சமாதானம் ஏற்பட்டுவிடாது; மாறாக, சமாதான வழிமுறைகளைப் பின்பற்றுவதினாலேதான் சமாதானம் நிலவ முடியும்,"

என்று, இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், எகிப்து பிரதமர் கர்னல் நாசரும் விடுத்துள்ள கூட்டறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

"ஜெனிவாவில் விரைவில் நடைபெறப்போகும் 4 வல்லரசு மாநாட்டின்பயனுகூலமாக எதிர்நோக்கியிருக்கும் அபாயங்கள் அனைத்தும் நீங்கி, உலக சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் பலமான ஒரு அடிப்படை அமையும் என்று நம்புகிறோம்," என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

என்ன காரணமோ?

ஜெனிவாவில் நடைபெற இருக்கும் 4 வல்லரசுகள் மாநாட்டில் ஆசியப் பிரச்சினைகளைப் பரிசீலிக்க அமெரிக்கா ஒப்புதல் தராது என்று அமெரிக்க செனேட்டர் ஸ்மித் தெரிவித்திருக்கிறார்.

ஆகஸ்டு 16-ல்!

1,50,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்?

போனஸ், தக்க ஊதியம் ஆகியவை கோரி வடக்கு வங்கத்தில் உள்ள 154 தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் 1,50,000 தொழிலாளர்கள், ஆகஸ்டு 16-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூ. 12,37,00,000 மதிப்புள்ள திட்டம்

சர்க்காரிடம் சென்னை நகர சபை தந்துள்ளதாம்

சென்னை நகர சபை, சென்னை மாநிலத்திற்கான இரண்டாது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென 12,37,00,000 ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை சென்னை சர்க்காரிடம் தந்துள்ளதாம்.

பனை மரம் ஏறும் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிதி உதவி!

பனைமரம் ஏறும் தொழிலாளர்கள் பனைமரம் ஏறும்போது அல்லது இறங்கும்போது கீழே விழுந்து உயிர் துறந்தாலோ அல்லது காயப்பட்டு உறுப்புகள் இழந்தாலோ அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்க திரு-கொச்சி சர்க்கார் தீர்மானித்துள்ளதாகப் பத்திரிகை ஒன்றின் மூலம் அறியக்கிடக்கிறது.

இதையொட்டி, திரு-கொச்சி மாநில தொழிலாளர் நஷ்டஈடு சட்டத்தில் பனை மரத் தொழிலாளர்களையும் உட்படுத்தி, அதற்காக 1955—56-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையும் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—7—'55 புதன்

வெற்றிக்கான அத்தாட்சி

தென்னாடு, தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தொழில் ஏற்பாட்டில் தென்னிந்தியா அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது.

திராவிடத்தை, தொழில் துறையில், வேண்டுமென்றே இந்தியப் பேரரசு புறக்கணித்திருக்கிறது.

மேற்கூறிய மூன்று குற்றச்சாட்டுகளை, இந்தியப் பேரரசின் மீது நாம் சாட்டுகிறோம்.

முதல் இரண்டிற்கும், திட்டவட்டமான மறுப்பு, இது வரை, காங்கிரஸ் தலைவர்களிடமிருந்துகூட எழவில்லை.

மறுப்பு எழாததோடு மட்டுமின்றி, நமது முதலிரண்டு குற்றச்சாட்டுகளின் உள்ளடக்கப் பொருளை, மனப்பூர்வமாக அப்படியே ஒப்புக்கொண்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சில தொழில்களை தென்னாட்டில் ஏற்படுத்த வேண்டும் என, இந்தியப் பேரரசை வற்புறுத்திக் கேட்கத் தொடங்கி இருக்கின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்.

அதுவகையில், அதாவது நமது குற்றச்சாட்டில் பொதிந்துள்ள பொருளை காங்கிரஸ் தலைவர்களும் உணர்ந்து கொள்ளும் வகையில், நாம் புரிந்து வரும் பணி வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நாம் நினைக்கும்பொழுது, நமக்கு நம்மை அறியாமலே ஒரு புதிய தெம்பு ஏற்படுகிறது. பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற புதிய உற்சாகமும் நமக்குள் பிறக்கிறது.

'தொழில் துறையில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் ஏற்பாட்டில் தென்னிந்தியாவிற்கு அதற்குரிய பங்கு தரப்படவில்லை' என நாம் இடையறாது கூறிவரும் உண்மையை காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந்துகொண்டதினால் நமக்கு ஏற்படும் மகிழ்ச்சியை விட பல மடங்கு மகிழ்ச்சி, அவ்வுண்மையை ஒப்புக்கொண்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சிற்சில தொழில்களைத் தென்னிந்தியாவிற்கு ஒதுக்க வேண்டும் எனக் கோரக் கிளம்பி இருப்பது கண்டு, நமக்கு ஏற்படுகிறது.

காங்கிரஸ் தலைவர்கள் நம்மை நிந்தித்தபோதிலும், தீவிரமாகத் தூற்றியபோதிலும், நமது குற்றச்சாட்டின் உண்மையை ஒப்புக்கொண்டு, விழிப்படைந்து, இனியாவது தொழில் ஏற்பாடு செய்யவேண்டும் என அவர்கள் கேட்க முன்வந்திருப்பது, நமக்குமட்டற்றபூரிப்பளிப்பது மட்டுமின்றி, நமது பணிக்கு ஏற்பட்டுள்ள மகத்தான வெற்றியை எடுத்துக் காட்டும் அளவுகோலாகவும் அமைந்திருக்கிறது.

அம்மகத்தான வெற்றிக்கு நாம் கொடுத்துள்ள விலை, அவர்கள் தூற்றலையும் தாக்குதலையும் நாம் பொறுமையுடன் தாங்கிக் கொண்டதேயாகும். அவர்கள் வசையினை நாம்முகமலர்ச்சியுடன் தாங்கிக் கொண்டது வீண்போகவில்லை; பலன் கைமேல் கிடைத்திருக்கிறது.

அவ்வெற்றிக்கும், பல நாள் கவலையுடன் காத்துக்கிடக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்படவில்லை. குறுகிய கால அளவிலேயே அப்பெரும் வெற்றி நமக்குக் கிட்டி இருக்கிறது.

நமது இலட்சியத்தை, இனி மெள்ள மெள்ள—ஆனால் நிச்சயமாக—காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக்கொள்ளும் காலமும், நம்முடன் ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்யும் காலமும் விரைவில் வரவிருக்கிறது என்பதின் முன் அறிவிப்புத்தான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சில தொழிற்சாலைகளை தென்னிந்தியாவில் நிர்மாணிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை வெளியிட்டிருப்பதாகும்.

நாம் முன் சென்றால், அவர்கள் நம்மைப் பின் தொடர்ந்து வருவர் என்ற உண்மை, அவர்கள் நடைமுறையில் நன்கு விளங்குகிறது.

நாம், விடா முயற்சியுடன் நமது இலட்சிய வெற்றிக்கு உழைத்தால், அவர்களும் நமது இலட்சியத்தை உவப்புடன் ஒத்துக்கொள்வதுடன், நமது உழைப்பிலும் ஆர்வத்துடன் பங்கு கொள்வர் என்பது, அவர்கள் மனப்பாங்கால் விளக்கமாகிறது.

இந்தியப் பேரரசு, தென்னிந்தியாவை வேண்டுமென்றே தொழில் துறையில் அலட்சியப் படுத்தி இருக்கிறது எனும் நம்முடைய குற்றச்சாட்டில், தொழில் துறையில் தென்னிந்தியா தேங்கிக் கிடக்கிறது, அல்லது அலட்சியப்படுத்தப் பட்டிருக்கிறது என்ற பகுதியை மட்டுந்தான் காங்கிரஸ் தலைவர்கள் வெளிப்படையாகக் கூற இப்பொழுது முன் வந்திருக்கின்றனர். அந்நிலையை 'வேண்டுமென்றே' தென்னிந்தியா மீது திணித்திருக்கிறது இந்தியப் பேரரசு எனும் நமது குற்றச்சாட்டை காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுது வெளிப்படையாகக் கூற முன் வரவில்லை. வெளிப்படையாகக் கூற முன்வராததுடன், நமது கூற்றை வழக்கம் போல் நையாண்டியும் செய்து வருகின்றனர்.

காங்கிரஸ் கட்சியில் பற்றுடையோர் அனைவருமே அப்பட்டியலில் இருந்திடவில்லை.

இவ்வாறு நையாண்டி செய்வோர், காங்கிரஸ் மேலிடத்தாருடன், ஏதோ ஒருவகையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவரேயாவர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

• அவர்களோ சிலர்; நமது குற்றச்சாட்டின் உண்மையை மனமார உணர்ந்திருப்போர் பலர் அவர்களிலே உள்ளனர்.

உண்மையை உணர்ந்துள்ளோர், நாம் கூறிவருவதைவிட மிகவும் தெளிவாகவும் சற்று ஆணித்தரமாகவும், நமது குற்றச்சாட்டின் உண்மைப் பொருளை வெளிப்படையாகக் கூறத் தொடங்கியுள்ளனர்.

அவ்வணியில், காங்கிரஸ் மேலிடத்தின் தயவுக்கும் தாட்சண்யத்துக்கும் இப்பொழுது தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருப்போர், நாள் செல்லச் செல்ல, கட்டுகளை அறுத்துக்கொண்டு, தங்களை விடுவித்துக்கொள்ள முன்வருவர். அவர்களுடைய சென்ற கால நடைமுறை, இந்த உண்மையைத்தான் நமக்கு உணர்த்தியவண்ணம் இருக்கிறது.

நமது உழைப்பு வீண்போகவில்லை. இரண்டாவது திட்டத்தில் 'அது வேண்டும்—இந்தத் தொழில் துவங்கப்பட வேண்டும்' என்க் காங்கிரஸ் தலைவர்களே கேட்கக் கிளம்பி இருப்பது, நமது வெற்றிக்கமைந்த அத்தாட்சியாகும்.

மன்னிப்புச் சலுகையை ஏற்றுக்கொள்ளவில்லை?

334 கெனியா சுதேசிகளின் நிலங்கள் பறிமுதலாம்!

நைரோபி, ஜூலை 11—

கெனியா சர்க்கார், 'பயங்கரவாதிகள்' என்று கூறப்படும் 334 கெனியா சுதேசிகளின் நிலங்களை பறிமுதல் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. சர்க்காரால் தரப்பட்ட மன்னிப்புச் சலுகையை இவர்கள் பயன்படுத்திக்கொண்டு சர்க்காரிடம் சரணடையாததால், அச்சலுகை நேற்றுடன் முடிவுற்றதும், அவர்கள் நிலங்களனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளனவாம்!

இவர்களைப்போல் இன்னும் ஏராளமான 'பயங்கரவாதிகள்' இருப்பதாகவும், அவர்களுடைய நிலங்களும் பறிமுதல் செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் பிரிட்டிஷ் இராணுவத்தின் நடவடிக்கையும் தீவிரமாகி வருகிறதாம். நேற்றிரவில் இங்கு 2 மாவ் மாவ் - இயக்கத்தவர் பிரிட்டிஷ் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனராம்!

அ. இ. வானொலி நிகழ்ச்சி திட்டங்கள்

மாற்றியமைக்கப்படுமென்கிறார் மத்திய அமைச்சர்

ஐதராபாத், ஜூலை 11—

சென்ற ஐந்தாண்டுகளுக்குள்ளாக இந்தியாவில் வானொலித் துறை 'பிரமாதமாக' விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், அகில இந்திய வானொலி நிகழ்ச்சித் திட்டம் முழுவதையுமே அடியோடு மாற்றியமைக்க வேண்டியது அவசியம் என்று மத்திய சர்க்கார் அமைச்சர் பி. வி. கேஸ்கர் கூறியிருக்கிறாராம்!

வியட்மின் பகுதி இந்திய வியாபாரிகள்

வர்த்தகத் துறைகளை மூடுவதென முடிவு

வடக்கு வியட்நாமில் (வியட்மின்) வர்த்தகத் துறையில் உள்ள சிக்கல் காரணமாக, அங்குள்ள 61 இந்திய வியாபாரநிறுவனங்கள், தங்கள்நிறுவனங்களை மூடிவிடுவதென முடிவு செய்துள்ளனவாம்.

இதுதவிர, பாக்கி உள்ள மற்றும் 20 வியாபார நிலையங்களும் காலாகாலத்தில், இதே காரணத்தை யொட்டி மூடப்பட்டுவிடுமென்று கூறப்படுகிறது.

மேற்படி தகவல் தெரிவித்த ஹாங்காங்கிலுள்ள இந்திய வர்த்தகத் துறை போர்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிதாக இங்கு அமைக்கப்பட்டுள்ள சர்க்காரில், நடுத்தர வர்க்கத்தினருக்கும், கடை வியாபாரிகளுக்கும் இடமே கிடையாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ரூ. 15-கோடி செலவில்

இடம் பெயர்ந்தோருக்கு வேலை வசதி

மேற்கு, கிழக்கு பகுதிகளில் தற்போது குடியேறியுள்ள சுமார் 1 லட்சம் அகதிகளுக்குப் புனர் வாழ்வமைப்பு வசதி அளிப்பது குறித்து, ஸ்ரீநகரில் கூடிய 9-மேற்கு மாநிலங்களைச் சேர்ந்த அகதிகள் புனர் வாழ்வமைப்பு இலாகா செயலாளர்களின் மாநாட்டில் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

அகதிகள் குடியிருக்கும் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளில், ஓரளவிற்குத் திறமை மிக்க வேலைகளையெல்லாம், இடம் பெயர்ந்தோர்களுக்கே அளிக்கப்படலாம் என்றும் மேற்படி மாநாடு ஆலோசித்துள்ளதாம்.

இது தவிர, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இடம் பெயர்ந்தவர்களுக்கு வேலை வசதி அளிக்க ரூ. 15 கோடி செலவிடுவதெனவும் முடிவு செய்துள்ளதாம்!

இந்த இடம் பெயர்ந்தோர்களுக்கு வேலை வசதிகள் அளிக்க, ஜப்பானியத் தொழில் முறையில் குடிசைக் கைத்தொழில்களும் ஆரம்பிக்கப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

வளரும் விஞ்ஞானம்!

அம்பு போல் பாய்ந்து ஓடும் புது ரகக் கார்கள் வருமாம்!

பர்மிங்ஹாம், ஜூலை 11—

இனிமேல் வர இருக்கிற கார்கள் சப்தமிடாமல்— அம்பு ஒன்று பாய்ந்து செல்வதுபோல் ஓடக்கூடிய மாதிரியில் இருக்குமாம்.

இப்படிப்பட்ட அமைப்புடன் கூடிய கார் ஒன்றை பர்மிங்ஹாம் ஆஸ்டின் மோட்டார் கம்பெனியினர் தயாரித்துள்ளதாகவும், அக்கம்பெனியின் பொன்விழாவின் போது மேற்படி ரகத்தைச் சேர்ந்த ஒரு கார் பொதுமக்கள் முன்னிலையில் ஓட்டிக்காட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கார் 125 குதிரை சக்தி வாய்ந்ததாகவும், 'டர்பைன்' என அழைக்கப்படும் கருவியின் சக்தியினால் இயக்கப்பெறும் என்றும் தெரிகிறது.

எனினும், இந்த ரகக் கார்கள் உடனடியாக மார்க்கெட்டுகளுக்கு வந்துவிடாதெனவும், எதிர்காலத்தில் வரக்கூடிய கார் எப்படி இருக்கக் கூடும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே இது மக்கள் முன்னிலையில் காட்டப்பட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

முன்புறத்தில் இயந்திரம் அமைக்கப்பட்ட கரிவாயு ('டர்பைன்') கார் உலகிலேயே இது தான் முதல் கார் என்று சொல்லப்படுகிறது.

அச்சகப் பொருட்காட்சி

பிரமிக்கத்தக்க அளவில் நவீன சாதனங்கள்

இப்போது லண்டன் ஒலிம்பியாவில் மிகப் பெரிய அச்சக சாதனப் பொருட்காட்சி ஒன்று நடக்கிறது. சுமார் 50 லட்சம் பவுன் மதிப்புள்ள சாதனங்கள் காட்சியில் உள்ளது.

அச்சுத் தொழில் தோன்றி 400 ஆண்டுகளாகின்றன. சமீப காலத்தில் பிரமிக்கத்தக்க அளவில் நவீன சாதனங்கள் உபயோகத்திற்கு வந்துள்ளன. சுமார் 90,00,000 பவுன் மதிப்புள்ள அச்சு இயந்திரங்களையும், சாதனங்களையும் ஆண்டுதோறும் பிரிட்டன் ஏற்றுமதி செய்கிறது.

போட்டோ மூலம் அச்சு வார்க்கும் இயந்திரங்களும், 'எலெக்ட்ரானிக் என்கிரேவிங்' மூலம் ஏழு நிமிடங்களில் அச்சு—பிளாக் தயாரிக்கும் இயந்திரங்களும், நவீன சாதனங்களும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

சிவில் விமானப் போக்குவரத்து இலாகா 1954 டிசம்பர் இறுதியில் மொத்தம் 78 விமான நிலையங்களைப் பராமரித்து வந்தது.

குழந்தைகளுக்கு கல்வி வசதி

சர்க்காரே அளிப்பது இனி மிகக் கடினமாம்!

கல்வி அமைச்சர் கூறுகிறார்

சென்னை, ஜூலை 12—

"'ஆங்கிலம், அல்லது மற்ற மொழிகளில் உள்ளது போன்று தமிழ் மொழியிலும், கருத்துக்களைச் சிறந்த முறையில் வெளியிட முடியுமா?' என்று சந்தேகப்படுகிறவர்கள், மறைந்த திரு. வி. கல்யாணசுந்தரனாரின் நூல்களைப் பார்க்க வேண்டும்—படிக்க வேண்டும்; அந்த நூல்கள் நிச்சயமாக மேற்படி சந்தேகவாதிகளைத் திருத்திவிடும்," என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், ஷெனாய் நகரில், திரு வி.க. பள்ளி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"நாடு முழுவதிலும், பள்ளி செல்லும் பருவத்திலுள்ள இலட்சக் கணக்கான குழந்தைகளுக்குசர்க்காரே கல்வி வசதி அளிப்பதென்பது மிகக்கடினம்; இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட நிறுவனங்களும், தனியாரும் சர்க்காரின் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள முன்வந்தாலொழிய நமது நாட்டில் கல்வித் துறையின் முன்னேற்றம் மிக மெதுவாகத்தான் இருக்கும்,"

என்றும் அவர் கூறியுள்ளார்.

வர, வர, உயர்நிலைப் பள்ளிகளைப் புதிது புதிதாக நிறுவவேண்டிய அவசியம் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்றும், இந்த ஆண்டில் மட்டும் மொத்தம் 30 புதிய உயர்தரப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

"தற்போது நாட்டில், 6 முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகளில் 55 சதவிகிதத்தினரே பள்ளி செல்கின்றனர். அடுத்த ஐந்தாண்டுகளில் பாக்கிக் குழந்தைகளில் பாதிப் பேராவது பள்ளிக்கூடம் செல்வதற்கு வழி செய்ய வேண்டும்; இதற்காக ரூ. 18 கோடி முதல் ரூ. 20 கோடி வரையில் செலவாகும்," என்றும், அவர் கூறியிருக்கிறார்.

"11 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்க மேலும் பல கோடி ரூபாய் செலவாகலாம்; ஆனால் இவ்வளவு பெருந்தொகையை நாம் உடனடியாக செலவு செய்யக் கூடாத நிலையில் இருப்பதால், இத்துறையில் மெதுவாகத்தான் முன்னேற வேண்டியதாக இருக்கிறது" என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அரசியல் 'செப்படி வித்தை'யாம்!

"முக்கியமான பிரச்சினைகளில், பொதுமக்கள், தம் கருத்தைத் தெரிவிக்க முடியாதபடி ஒடுக்குவதற்கு, பாகிஸ்தான் அதிகார வர்க்கம் காஷ்மீர் பிரச்சினையைப் பயன்படுத்தி வந்தது; ஆனால், இப்போது இப்பிரச்சினை முக்கியத்துவத்தை இழந்து விட்டதால், ஆப்கன் பிரச்சினையைப் பெரிதாக்கி, மக்கள் கவனத்தை வேறு மார்க்கத்தில் திருப்பிவிடும் தந்திரத்தை, அதிகாரவர்க்கம் கையாண்டு வருகிறது,"

என்று, கான் அப்துல் கபார்கான் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் மீது திணிக்கப்படும் திட்டங்கள் நிலைக்குமா?

"தற்போதுள்ள சூழ்நிலையில், மேற்கு பாகிஸ்தானை ஒரே உறுப்பாக இணைக்கும் திட்டம், நன்மை செய்வதற்குப் பதில், தீமையையே விளைவிக்கும்; மக்கள் கருத்தறியாமல், அவர்கள்மீது திணிக்கப்படும் எந்த முடிவுகளும் நிலைப்பதில்லை," என்றும் அவர் எச்சரித்தார்.

‘இலட்ச’க்கணக்கில் இருந்த நஷ்ட ஈடு தொகை ‘கோடி’க்கணக்கில் வளர்ந்த விந்தை!

ஒரே ஆண்டில் ரூ. 80-இலட்சம் நஷ்டம் நேரிட்டதற்குக் காரணமென்ன?

10-இலட்சம் பேர் பணியாற்றும் நிறுவனத்தை நிர்வகிக்கும் சர்க்கார் ‘திறமை’ படைத்திருக்க வேண்டும்

இந்திய இரயில்வே இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவினர் ‘அதிர்ச்சி’ அடைகின்றனர்?

“இரயில்வேக்களில் இலஞ்ச ஊழல் பற்றிய விசாரணையில், நாங்கள் அதிகமாக மனவருத்தம் கொள்கிறோம்; இந்திய சர்க்கார் இலாகாக்களில்—இரயில்வே இலாகா உட்பட இலஞ்ச ஊழல்கள் மலிந்து கிடப்பது நாங்கள் அறிந்ததே; ஆனால், குறிப்பாக, இரயில்வே நிர்வாகத்தில் இலஞ்ச ஊழல் நடைபெறுவதில் கையாளப்பட்டு வரும் நேர்மையற்ற—நாணயமற்ற போக்கினைக் காணுகையில், நாங்கள் வெகுவாக அதிர்ச்சியடைகிறோம்;

“இந்திய இரயில்வேக்களின் ஆண்டு வருமானம், உலகிலுள்ள மற்ற பெரும்பான்மை நாடுகளின் ஆண்டு வருமானத்தைவிட அதிகமாகும். இரயில்வே நிறுவனத்தில் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் பணிபுரிகின்றனர்; ஆண்டொன்றுக்கு 120 கோடி பேர் பிரயாணம் செய்கின்றனர்; 10 கோடி டன் சாமான்கள் ஏற்றிச்செல்லப்படுகின்றன; எனவே, இத்தகைய மிகப் பெரிய அளவு போக்குவரத்துள்ள இந்திய இரயில்வே நிர்வாகத்தை சிக்கனமும், திறமையும், நாணயமானதாகவும் வைத்துக் கொள்ள சர்க்கார் திறமை படைத்திருக்கவேண்டும்;

“கிழக்கிந்திய இரயில்வே தந்த ஒரு கணக்குப்படி, நிர்வாகத்தினரால் கண்டுபிடிக்கப்படாத ‘டிக்கேட் இல்லாத’ பிரயாணத்தின் மூலம் அந்த சர்க்காருக்கு ஒரு ஆண்டில் ரூ. 80 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய டிக்கேட் இல்லாப் பிரயாணத்திற்கு பெரும்பான்மையான காரணம் இரயில் பிரயாணிகள் இரயில்வே சிப்பந்திகளுடன் இரகசிய மோசடி ஏற்பாடுகள் செய்து கொள்வதுதான்;

“இது தவிர, கீழ்வகுப்புக்களுக்கென டிக்கேட் வாங்கிக் கொண்டு மேல் வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்கின்ற குற்றங்களும் நடைபெறுகின்றன;

“கீழ்ப் பிரிவு சிப்பந்திகள் தங்களிடையே இலஞ்சப் பழக்கம் இருந்து வருவதை ஒப்புக் கொள்கின்றனர். அவர்கள் தங்கள் மேலதிகாரிகளின் சட்ட விரோதமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்; மாமூலாக நடைபெற்று வரும் தங்கள் பழக்கத்தைக் கடைப்பிடிக்கத் தவறினால், தாங்களும், தங்கள் உடன் பணியாளர்களும், சிற்சில வேளைகளில் மேலதிகாரிகளும்கூட, தங்களை, மேல் பதவியிலிருப்போர் பழி வாங்க இருக்கின்றனர் என்று கூறுகின்றனர்;

“உயர் அதிகாரிகளின் செய்கைகள்கூட குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இருக்கிறது; எனவே, பொதுப் பணியிலும், நிர்வாகத்திலும் இருக்கின்றவர்கள் நாணயஸ்தர்களாகவும், நேர்மையாளர்களாகவும் இருந்தால்தான் இத்தகைய இலஞ்சக் குற்றங்கள் ஓரளவுக்கு குறையக்கூடும்.”

—இவ்வாறு, இந்திய இரயில்வேக்களில் இலஞ்சக் குற்றங்கள் ஏராளமாகப் பெருகியிருப்பது குறித்து இந்திய சர்க்காரால், ஆச்சாரியா கிருபளானி தலைமையில் நியமிக்கப்பட்ட இரயில்வே இலஞ்ச விசாரணைக் குழு, தனது விசாரணையை முடித்துக்கொண்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

“வாகன்கள் பற்றாக்குறை ஒழிக்கப்பட்டு, தேவையான அளவுக்கு வாகன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால், இலஞ்சப் பழக்கத்திற்கான முக்கியமான காரணம் ஒன்று நீங்கிவிட்டதாகக் கருத முடியும்,” என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவ்வறிக்கையில் மேலும் காணப்படுவதாவது:—

“இலஞ்சக் குற்றங்கள் மலிவுக்குக் காரணம் பெரும்பாலும் அதிகாரிகள், சிப்பந்திகளின் நாணயக் குறைவே காரணம் என்றாலும், வேறு பல வழிகளாலும்-உதாரணமாக ‘வாகன்’கள் விநியோகம் செய்வதிலும் இத்தகைய குற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன;

“வாகன் சப்ளை முதலிய காரியங்கள் பற்றி வர்த்தகர்கள் எதுவும் தெரிந்துகொள்ளாமல் இருப்பதை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பல தீய அதிகாரிகள் கொழுத்த இலாபம் அடைகின்றனர்.

“தேவைக்கேற்ப, வர்த்தகர்களுக்கு வாகன்கள் கிடைத்தால் இலஞ்சக் குற்றம் நிகழ்வதற்கான மற்றொரு பெரிய காரணம் நீங்கி விடும்.

“தற்போது இந்திய இரயில்வேக்களில், சாமான்கள் அனுப்புவோரிடமிருந்தும் அவற்றைப் பெறுவோரிடமிருந்தும் இலஞ்சம் பெறுவது என்பது ஒரு ‘அரும் பெரும் கலை’யாகவே ஆகிவிட்டது.

“ஒரு முக்கியமான இரயில் நிலையத்தில் உள்ள இரயில் நிலைய சூப்பரிண்டெண்டிற்கு ‘அதிகப்படியான வருமானம்’ மாதம் ஒன்றுக்கு ரூ. 5000-க்குக் குறையாது என்று விசாரணையின்போது அந்நிலைய சிப்பந்தி ஒருவரால் கூறப்பட்டிருக்கிறது.”

இத்துடன் மட்டுமல்லாமல், இலஞ்சக் குற்றத்திற்கான மற்றும் பல காரணங்கள் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவை யாவன:—

சாமான்கள் அனுப்புவதில் சிக்கலான விதி முறைகள்; மேற்பார்வையிடும் அதிகாரிகளின் திறமையின்மை—அல்லது ஊழல் மனப்பான்மை—அசிரத்தை அல்லது வேலைத் தொல்லை; இலஞ்சப் பழக்கம் காரணமாக, கெஜட் அதிகாரிகள் சரியாக மேற்பார்வையிடாமை; குற்றங் குறைகளில் மேலதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்காமை; கீழ்ப்பிரிவு சிப்பந்திகளின் பொருளாதார நிலைமை; திறமையற்ற அல்லது ஊழல் மிகுந்த போலீஸ் நிர்வாகம்.

“இவை தவிர, இரயில் சிப்பந்திகள், கெட்டுப்போகக்கூடிய பண்டங்களை ‘கெட்டவைகள்’ என்றும், கால்நடைகளை ‘நோய் உள்ளவை’கள் என்று கூறி மிரட்டி இலஞ்சம் பெறுவதாகப் புகார் வந்துள்ளது. இலஞ்சம் கொடுக்காவிட்டால், மேற்படி சிப்பந்திகள், தாங்கள் மிரட்டிய வண்ணமே செய்து வருகின்றனர். இப்படிப்பட்ட காரணங்களாலேயே இரயில்வே நிர்வாகம் ஏராளமான நஷ்டஈடு கொடுக்க நேரிடுகிறது.

“இத்தீயச் செயல் இந்திய இரயில்வேக்களில், நாடு முழுமையிலும் பரவலாக இருந்து வருகிறது.

“இரயில் நிலையங்களில் உணவுப் பண்டங்கள் சம்பந்தப்பட்ட வகையிலும் நிர்வாகத்திறமையின்மையை நேர்மையின்மையும் காணப்படுகிறது. உணவுப் பொருட்கள் சம்பந்தமான ‘காண்டிராக்டு’களை அத்தொழில்களுடன் சம்பந்தமே பெற்றிராத ‘பெரிய காண்டிராக்டு’களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. இம்முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும். பல இடங்களிலுமுள்ள மேற்படி வகையைச் சேர்ந்த காண்டிராக்டர்கள் ஏகபோக வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்கள் இரயில்வே உயர் வட்டாரங்களில் செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

“இவைகளைப் போன்றுதான் எஞ்சினீயரிங் துறையிலும் இலஞ்சப் பழக்கம் வெகு பரவலாகக் காணக்கிடக்கிறது. அநேக ‘சீனியர் எஞ்சினீயரிங்’ அதிகாரிகள் இலஞ்சம் வாங்குகின்றனர்.

“இந்த விதமாக, ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வேலையிலும் இலஞ்சம் பரவியிருக்கிறது.”

மேலும், இரயில்வேக்கள் வழங்கும் நஷ்டஈடு தொகைகள் பற்றியும் விசாரணைக் குழு புகார் கூறியிருக்கிறது:—

“யுத்தத்திற்கு முன் இந்தியா முழுவதற்குமாக சுமார் ரூ 4 இலட்சமே நஷ்டஈடாகக் கோரப்பட்டிருந்தது; சென்ற மூன்று ஆண்டுகளில், இது, ரூ. $3\frac{1}{2}$ கோடியிலிருந்து 4 கோடி வரையில் அதிகரித்திருக்கிறது. சரக்குகள் போக்குவரத்து அதிகரித்திருப்பதையும், விலைவாசிகள் அதிகரித்திருப்பதையும் கருத்தில் கொண்டாலும்கூட, இத்தொகை வெகு அதிகமாகும்; ஆகவே நஷ்டஈடு தரும் இலாகாவை தக்க முறையில் கண்காணிக்க வேண்டும்.”

கணவனை அடித்த மனைவிக்கு அபராதம்

கண்டிக்கலாமே தவிர அடிக்கக் கூடாதெனத் தீர்ப்பு

கெய்ரோவிலுள்ள மத நிறுவனக் கோர்ட்டில் முஸ்லிம் ஒருவர், வீட்டிற்கு நேரம் கழித்துவந்ததன் காரணமாகத் தன்னை, தன் மனைவி அடித்துவிட்டதாக வழக்குத் தொடர்ந்தார்.

‘முஸ்லிம் சட்டத்தில், மனைவியைத் திருத்த கணவனுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது; அதே போன்று, தன் கடமையில் கணவன் தவறும்போது, அவரைத் திருத்த மனைவிக்கு உரிமை இருக்கவேண்டும்,’ என்று, வழக்குத் தொடர்ந்த அவரது மனைவி வாதாடினார்.

‘கணவரைக் கண்டிக்கலாமே ஒழிய, அடிக்கக்கூடாது,’ என்று நீதிபதி தீர்ப்பளித்து, மனைவிக்கு 3 - பவுன் அபராதம் விதித்தார்.

வேலையின்மையைப் போக்குவதற்கு!

நெல் அரைக்கும் மில்கள் மூடப்படும்?

கைக்குத்தல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்?

இந்தியாவில் நெல் அரைக்கும் மில்களின் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைத்து வந்து ஐந்து ஆண்டு காலத்துக்குள் அவற்றிற்குப் பதிலாக கைக்குத்தல் முறையை உபயோகத்துக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்றும், கைக்குத்தல் தொழிலை கூட்டுறவு முறையில் அமைத்து அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் நெல் அரைவு விசாரணை குழு சிபாரிசு செய்திருக்கிறது.

அந்த ஏற்பாடு, கிராம மக்களுக்குப் புதியதொரு வேலை வாய்ப்புக்கு வழி வகுக்குமென்றும், விவசாயத் தொழிலாளர்களிடையே தற்போது குறிப்பிட்ட சில காலங்களில் ஏற்பட்டு வரும் வேலையின்மையைப் போக்குமென்றும், நாட்டில் அரிசியை உணவாக உபயோகிக்கும் மக்களுக்கு மேலும் அதிகமான போஷாக்குச் சத்து கிடைக்கும்படி செய்யுமென்றும் குழு கருதுகிறது.

வருங்கால சந்ததியினர் வளர்ச்சியின் எல்லை

கதிரியக்கக் கிளர்ச்சியால் குன்றி விடுவராம்!

அணுகுண்டு வெடிப்பின் கதிரியக்கக் கிளர்ச்சியின் காரணமாக, உலகின் வருங்கால சந்ததியினர் குறுகிய உடலமைப்பைப் பெற்றவர்களாகவும், குறுகிய ஆயுள் உள்ளவர்களாகவும் இருப்பர் என்று குறிப்பிடப்படுகிறது.

ஐரோப்பாவிலிருந்து திரும்பும் வரையில்!

பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல் குலாம் முகமது ஐரோப்பாவிலிருந்து திரும்பி வரும் வரையில் பாகிஸ்தானில் புதிய மந்திரி சபை எதுவும் அமைக்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு சிறை!

பம்பாய்சர்க்கார் அப்பீல் மனுவின் மீது தீர்ப்பு

சர்க்கார் அனுமதி இல்லாமல் அயல்நாட்டு மதுவகைகளை வரவழைத்து வைத்திருந்ததாக பண்டா சுதேச மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த மகாராஜா பிருதிவ் சிங்ஜீ பீம்ஜிசிங் என்பவருக்கு 6 மாத வெறுங்காவல் தண்டனையும், ரூ. 1,000 அபராதமும் விதித்து பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இந்த வழக்கு முதலில் பம்பாய் அடிஷனல் நீதிபதியின்முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அடிஷனல் நீதிபதியால் அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அவரை விடுதலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து, அவருக்கெதிராக பம்பாய் மாநில சர்க்கார், பம்பாய் உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொண்டது.

போலீஸ் அதிகாரிகள், கான்ஸ்டபிள்கள் கைது!

ஆமதாபாத்தில், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், இரு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரு தலைமை கான்ஸ்டபிள்கள், எட்டு கான்ஸ்டபிள்கள், ஒரு ஓட்டல் அதிபர் ஆகிய 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தரப்படுகிறது.

சந்தேகத்தின் மீது போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த ஒரு நபர் கொலை செய்யப்பட்டதன் சம்பந்தமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்!

முட்டை, நெய், ஊறுகாய் வகையிலும் மோசடியா?

தடுக்க சட்டம் வரக்கூடும்?

முட்டை, ஊறுகாய், நெய் ஆகியவைகளில் மோசடியான ‘முத்திரை’கள் போடப்படுவதைத் தடுக்க, விவசாயப் பண்டங்கள் தரம், பிரிப்பு, மார்க்கெட் வசதி மசோதாவைக் கொண்டுவர இந்திய சர்க்கார் ஆலோசித்துவருகிறதாம்!

இஸ்லாமிய விடுதலை வீரர்களுக்கு இருட்டடிப்பு!

உ. பி. அரசாங்கத்தின் ஓரவஞ்சனை!

“சமயம் கிட்டும்போதெல்லாம், ‘முஸ்லீம்கள் வகுப்புவாதிகள்; நாட்டுப் பற்றற்றவர்கள்; துவேஷங் கொண்டவர்கள்,’ என்றெல்லாம் குற்றஞ் சாட்டப்படுகிறது. ஆனால், இந்திய சர்க்காரின் உறுப்பான உ. பி. மாகிலத்தில், நாட்டின் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகிகளின் நினைவுச் சின்னம் ஒன்றை சர்க்கார் ஏற்படுத்தப் போகிறதாம்; இதற்காகப் பொதுமக்கள் பொருளுதவி செய்ய வேண்டுமென்று அந்த சர்க்கார் வேண்டுகோளும் விடுத்துள்ளது. இத்தகைய தேசியத் தியாகிகளின் பட்டியலில் முஸ்லீம்களின் பெயர் காணப்படவில்லை; அவர்களுடைய நினைவுச் சின்னங்களும் இல்லை.

“கி. பி. 1857 முதல் 1947 - வரை நடந்த இந்திய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லீம்களுக்குச் சம்மந்தமே இல்லை எனும் வகையில் நிலைமை இருக்கிறது. இதைக் காணும் முஸ்லீம்களின் மனம் புண்படாமல் இருக்க முடியுமா? ‘இவ்விதம் முஸ்லீம்களான எங்கள் மூதாதையர்களுடைய தியாகத்தை ஏன் மறந்து விட்டீர்கள்? இது நியாயமா?’—என்று முஸ்லீம்கள் கேட்டால், அவர்கள் உடனே ‘வகுப்பு வாதிகள்’ எனவும், ‘முஸ்லீம் லீகர்கள்’ எனவும், ‘பாகிஸ்தான் ஏஜண்டுகள்’ என்றும், ‘தேசத் துரோகிகள்’ என்றும் கூறப்படுகின்றனர்.

“முஸ்லீம் தலைவர்களின் தியாகத் தன்மையை விட்டு விட்டதற்குக் காரணங்கள் இரண்டாக இருக்கலாம்; ஒன்று, அவர்களது தியாகத்தை அறிந்துகொள்ளாத காரணத்தால் விட்டிருக்கலாம்; மற்றொன்று வேண்டுமென்றே அவர்களின் பெயர்களை விட்டிருக்க வேண்டும். அறிந்து கொள்ளாமல் முஸ்லீம் பெரியார்களின் பெயர்கள் விடப்பட்டிருக்குமாயின், அது மீண்டும் தெரியும்படி செய்ய வேண்டியது அந்த நாட்டு மக்களின் கடமையாகும்; இதைத் தூண்ட வேண்டியது மத்திய சர்க்காரின் பொறுப்பும் ஆகும்.

“பிரச்சினை இவ்விதமில்லாமல், வேண்டுமென்றே முஸ்லீம் பெரியார்களின் பெயர்கள் விடப்பட்டிருக்குமாயின், இந்த ‘வியாதி’க்கு மருந்தே இல்லை. அறியாமலோ, அல்லது அறிந்தோ இதனைச் செய்து வரும் உத்திர பிரதேச மாநிலம் பொதுமக்களிடம் தனது வேண்டுகோளை வெளியிடும்போதாவது, இந்திய முஸ்லீம்களுக்கும் இதில் பங்கு உண்டு என்பதை ஏன் சிந்தித்துப் பார்க்கவில்லை என்று கேட்கிறோம். ஆகவே, உ. பி. சர்க்காரின் இந்த முறை வெறுக்கத்தக்கது; கண்டிக்கத்தக்கதும்கூட; இதைத் துரிதமாக சர்க்கார் சீர்ப்படுத்திக் கொள்வது அதிக நன்மை பயப்பதாக இருக்கும்.”

—‘தாருல் இஸ்லாம்’, 2—7—55

அகாலியர் மொழி மாநில கிளர்ச்சிக்கு உரிமை

தடை உத்தரவு வாபஸ்

பிரதமர் பண்டித நேருவின் வரவு ஒரு புகலாகிறது!

தம் வீழ்ச்சியைத் தடுக்க பஞ்சாப் அமைச்சர் குழுவின் ஏற்பாடு

சாந்திகார், ஜூலை 12—

மொழி மாநிலக் கோரிக்கை முழக்கங்களை முழக்கவும், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தவும், அகாலியர்களுக்கு இருந்துவந்த தடையை, பஞ்சாப் அரசாங்கம் வாபஸ் பெற்று விட்டது.

சென்ற ஏப்ரல் மாதம் 10-ந் தேதி, அமிருதசரஸ் மாவட்ட மாஜிஸ்திரேட்டால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; மே முதற் கொண்டு மேலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படி தடை உத்தரவு நீடிக்கப்பட்டது.

மே 10-ந் தேதியன்று, அகாலி தலைவரான மாஸ்டர் தாராசிங் அமிருதசரசில், தடை உத்தரவை மீறி, கூட்டுத் தோழர்களுடன் கைது செய்யப்பட்டார்.

தடையை மீறினதற்காக நேற்று வரை, 8,000 அகாலியர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பல மாவட்டங்களிலும் நடைமுறையில் இருந்துவந்த தடை உத்திரவு, ஏற்கனவே காலம் சென்றுவிட்டது.

தடை உத்தரவு வாபஸ் பெறப்படுகிறது என்ற செய்தியை முதல் முதலாக, பஞ்சாப் முதல் மந்திரி பீம்சேன் சச்சார், அம்பாலாவில் அறிவித்தார்.

ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் பிரதமர் பண்டித நேருவிற்கு மரியாதை காட்டுவதற்கு அடையாளமாகவே, அகாலியர் மொழி மாநிலக் கிளர்ச்சிக்கு விதிக்கப்பட்டிருந்தத் தடை வாபஸ் பெறப்படுவதாக, முதல் மந்திரி சச்சார் ஒரு அருமையான புகலைக் கூறி இருக்கிறார்.

அகாலியர் கிளர்ச்சிக்குத் தடை விதிக்கப்பட்டதும், ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்ததும், மந்திரி சபையில் பெரும் உள்ளடிக் குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது; மந்திரி சபையே கவிழ்ந்துவிடக்கூடிய கட்டத்தை அடைந்தும் இருக்கிறது. தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் உள்ளெண்ணத்தினலேயே முதல் மந்திரி சச்சார், அகாலியர் கிளர்ச்சிக்கு விதித்திருந்த தடையை வாபஸ் பெற்றுக் கொள்ள முன் வந்ததாக விஷயமறிந்த வட்டாரம் நம்புகிறது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

கல்லக்குடி

15—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. தம்புசாமி
பேசுவோர்:
ஏ. பி. தர்மலிங்கம்
எஸ். நெடுமாறன்
எம். எஸ். மணி

குறிப்பு: அன்று காலை 9 மணிக்கு, தோழர் டி. வி. முத்துக்கிருஷ்ணன் தலைமையில், கல்லக்குடி இரயில்வேநிலையத்திற்கு தொண்டர்கள் சென்று 'கல்லக்குடி' என்ற அச்சிட்ட தாளை ஒட்டுவார்கள்.

★

சிவகாசி

15—7—55 மாலை 7 மணிக்கு, நகர் சிவன் கோயில் முன்பாக, தோழர் ஏ. சுப்பையா தலைமையில் நடைபெறும். தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், எஸ். கலிங்கன் ஆகியோர் பேசுவர்.

★

பொன்மலை

மேலக்கற்கண்டார்கோட்டை
15—7—55 மாலை 6 மணிக்கு: கழகக் கட்டிடத்தில், மும்முனைப் போராட்ட நினைவு நாள் கொண்டாடப்படும்.

★

சொற் பயிற்சிக் கூட்டம்

15—7—55 அன்று, வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில் மும்முனைப் போராட்ட நினைவு நாளும், இரவு 8 மணிக்கு, தோழர் சி. இராசகோபால் தலைமையில் 'நமது கடமை என்ன?' என்ற பொருள் பற்றி சொற்பயிற்சிக் கூட்டமும் நடைபெறும்.

மாநில மாநாட்டு நிதிக்காக

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக, எஸ். எஸ். ராசேந்திரன் நாடக மன்றத்தினரால் தோழர் மு. கருணாநிதி எழுதிய 'மணி மகுடம்' நாடகம், சேலம் விக்டோரியாவில், 17-7-55 மாலை 6-30, இரவு 10-30 மணிக்கு (இரு நாடகங்கள்) நடைபெறும்.

தலைமைக் கழகம்: அறிக்கை—20/55

பெங்களூர் மாவட்டக் கிளைத் தேர்தல்

பெங்களூர் மாவட்ட தி.மு.கழக கிளைத் தேர்தல் பொதுச்செயலாளர் அவர்கள் தலைமையின் கீழ் 17—7—55 ஞாயிறன்று காலை 10 மணிக்கு, பெங்களூர் பிளாக்பள்ளியிலுள்ள அப்பாவுப் பிள்ளைப் பள்ளிக்கூடத்தில் நடைபெறும். பெங்களூர் மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்களிலிருந்து மாவட்டக் கிளைக்குப் புதிதாகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்வார்களாக.

'அறிவகம்' சென்னை 13-7-'55 — இரா நெடுஞ்செழியன், பொறுப்பாளர்

பெங்களூரில்

பொதுச்செயலாளர்

கலந்துகொள்ளும் நிகழ்ச்சி நிரல்

★

17—7—55 ஞாயிறு

காலை 7-30 மணி: புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு.
10 மணி: மாவட்டக் கிளை தேர்தல்.
11 மணி: உறுப்பினர் கூட்டம்.
மாலை 4 மணி: சீராமபுரத்திலிருந்து ஊர்வலம்.
6-30: சிக்கலால் பார்க்கில் வரவேற்புப் பொதுக் கூட்டம்.

பம்பாய்-அந்தேரி தி.மு.கழக தோழர்கட்கு

17—7—55 மாலை 4½ மணிக்கு, பம்பாய்-அந்தேரி தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். சொந்தமாக பணிமனை அமைத்தல், படிப்பகம் நிறுவுதல், கையெழுத்துப் பிரதி வெளியிடுதல் ஆகியவை ஆய்வுக்கு வரும்.

கழகக் கூட்டங்கள்

★

அய்யம்பேட்டை

ஆண் பாடசாலைக்கு அருகில்
15—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: மு. தணிகாசலம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
காஞ்சி கல்யாணசுந்தரம்
சி. வி. எம். அண்ணாமலை
இர. அர்த்தநாரி

★

பேரடுவார்பட்டி (பழனி வட்டம்)

15—7—55 மாலை 6 மணிக்கு, காளிகோயில்மேல்புரத்தில், தோழர் காளிபட்டி ராமசாமி தலைமையில் நடைபெறும். தோழர் மீ. சு. இளமுருகு, தோழியர் மீ. சு. பொற்செல்வி, மற்றும் பலர் பேசுவர்.

கோவை நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

"17-7-55 இரவு 9 மணிக்கு, கோவை நகர தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும் செயற் குழுக் கூட்டத்தில், செயற் குழுவில் ஏற்பட்டுள்ள காலி இடங்கள் இரண்டிற்கும் (பொருளாளர், செயற் குழு உறுப்பினர்) தேர்தல் நடைபெறும். தேர்தலில் நிற்க விரும்பும் தோழர்கள் முன்னதாகவே செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

"தேர்தலில், செயற் குழு உறுப்பினர்கள், பொது உறுப்பினர்கள் யாரும் நிற்கலாம். வாக்களிக்கும் உரிமை செயற் குழுவினர்களுக்கு மட்டும்தான் உண்டு,"

என்று, கோவை நகர தி. மு. கழக செயலாளர் தோழர் சே. அ. ராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

அறிவிப்பு

"7—7—55ல் வெள்ளகோவில் பொதுக்கூட்டத்திற்குச் செல்லும் வழியில் கார் ஒரு மரத்தில் மோதியதால், நான் காயமடைந்து காங்கயம் மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்று வருவதால், இதுவரையிலும் நான் ஒத்துக்கொண்ட கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் இரண்டு மாதத்திற்குத் தோழர்கள் யாரும் கூட்டத்திற்கு அழைக்கவேண்டாம் என்றும்கேட்டுக்கொள்ளுகிறேன்." என்று, கோவை - செழியன் அவர்கள் அறிவிக்கிறார்.

இந்திய சர்க்கார், தபால்-தந்தி இலாகாவுக்குத் தேவைப்படும் ஈயக் காப்புறையிட்ட 'கேபின்'கள் அனைத்தையும் தயாரிக்கும் பொருட்டு இந்துஸ்தான் கேபின் உற்பத்திசாலையின் உற்பத்தி சக்தியை இருமடங்காக்குவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்துக்கு ரூ. 7.5 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

★

அரசாங்கம் குனிந்து கொடுத்ததின் எதிரொலி!

தடை மீறுவதை அகாலி தளம் கைவிட்டது

அமிருதசரஸ், ஜூலை 12—

மொழிவழி மாநில கோரிக்கை முழக்கங்களை ஒலிக்கக் கூடாது என அரசாங்கம் விதித்திருந்த தடையை எதிர்த்து செய்துவந்த 64-நாள் கிளர்ச்சியை இன்று இரவோடு கைவிடுவதாக சிரோமணி அகாலி தளம் அறிவித்திருக்கிறது.

அகாலி தளக் கிளர்ச்சி 144-தடைச் சட்டத்தின் கீழ் விதித்திருந்த தடையை அரசாங்கம் வாபஸ் பெற்றுவிட்டதின் விளைவாகவே அகாலி தளம் மேற்படி முடிவிற்கு வந்திருக்கிறது.

ஒரு லட்சம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வருங்காலத்தில்; அனுமதி (லைசென்ஸ்) முறையின்கீழ் குரங்கு ஏற்றுமதி கட்டுப்படுத்தப்படும் என்று தெரிகிறது.

குரங்குகள் துன்புறுத்தப்படக் கூடாதென்பதற்கும், குறிப்பிட்ட ஒரு காரியத்தைத் தவிர, மற்றெதற்கும் அவைகள் பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காகவுமே மேற்படி லைசென்ஸ் முறை அமுல் நடத்தப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

பக்ரா—நங்கல் திட்டத்துக்கு மொத்தம் ரூ. 158,33,00,000 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வாகன் வசதிகள் கிடைக்காததால் சென்னை மாநிலத்தில் விலைவாசிகள் உயர்வு?

இந்தியப் பேரரசின் ஏற்றுமதிக் கொள்கையே காரணமா?

சென்னை, ஜூலை 13—

சென்னை நகரில் கடந்த பத்து தினங்களாக எண்ணெய், பருப்பு வகைகள் ஆகிய மளிகைப் பண்டங்களின் விலை அதிகரித்து வருகிறது. குறிப்பாக நல்லெண்ணெயின் விலை ஒரே வாரத்திற்குள்ளாக மட்டும் ரூ 1—8—0 ஆக இருந்தது ரூ. 2—10—0 ஆக உயர்ந்திருக்கிறது.

சென்னை மாநில வியாபாரிகள் ஏராளமான அளவில் வாங்கி வட இந்தியப் பகுதிகளில் வைத்திருக்கும் நல்லெண்ணெய் 'ஸ்டாக்கு'களை, சென்னையின் தேவைக்கு ஏற்ப கொண்டுவரப் போதுமான 'வாகன்' வசதிகள் இல்லாமையால், நல்லெண்ணை விலையின் திடீர் உயர்வுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது; சென்னை மாநிலத்தின் நல்லெண்ணெய் தேவையில் 50 சதவிகிதம், அயல் மாநிலங்களிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

1955-ம் ஆண்டின் முதல் பாதிப் பகுதிக்கான இந்திய சர்க்காரின் ஏற்றுமதிக் கொள்கையின் கீழ் மொத்தம் 2,000 முதல் 2,200 டன் எண்ணெய்தான் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் தற்போது நடைபெற்றுவரும் பிற்பகுதியில், இந்திய சர்க்காரின் 'தளர்த்தப்பட்ட ஏற்றுமதிக் கொள்கை'யின் பேரில், 'எந்த வியாபாரியும் எவ்வளவு அளவு எண்ணெய் வேண்டுமானலும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படலாம்" என்று கூறப்பட்டதையொட்டி, வியாபாரிகள், வெளிநாடுகளில் அதிக விலைக்கு வியாபாரம் நடத்துவதற்காக ஏராளமான அளவில் எண்ணெய் வித்துக்களும், எண்ணெயும் விலைக்கு வாங்கி விடுகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள தற்போதைய எண்ணெய் விலையின் நிலைப்படி, இங்குள்ள வியாபாரிகள் மணங்கு எண்ணெய் ரூ. 16 முதல் 18 வரையிலும், 165 பவுண்டுகள் கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ 56 வீதம் எண்ணெய் வித்துக்களும் வாங்கி கையிருப்பில் வைத்துக் கொள்கின்றனர்.

அந்தப் பொருட்களின் விலை வெளிநாடுகளில் அதிகரிக்கும் வரையில் அவைகளைத் தங்கள் கையிருப்பில் வைத்துக்கொண்டு, வெளிநாட்டு விலை தங்களுக்குச் சாதகமாக அதிகரிக்கும்போது, இந்திய சர்க்காரின் புதிய ஏற்றுமதிக் கொள்கைப்படி, வேண்டிய அளவு ஏற்றுமதி செய்து கொழுத்த இலாபம் பெறலாம் என்பதே இதற்கான காரணமாகும்.

தற்போது சென்னை நகரில் நல்லெண்ணெய் விலை அதிகரிப்பையொட்டி கடலை எண்ணெயின் விலையும் அதிகரித்திருக்கிறது.

நல்லெண்ணெயின் விலை அதிகரித்திருப்பதற்கு, சாதாரணமாக வீட்டுக்கு உபயோகப்பட்டு வந்த கடலை எண்ணெயைக் கைவிட்டு வீடுகளில் நல்லெண்ணெயை வாங்க முற்பட்டதும் மற்றொரு காரணம் என்றும் கூறப்படுகிறது.

நல்லெண்ணெய் தவிர, தேங்காய் எண்ணெயின் விலையும் உயர்ந்துள்ளது. மேலும் சீரகம், வெந்தயம், கடுகு, சவ்வரிசிபோன்ற மற்றும் மளிகைப் பொருட்களின் விலையும் உயர்வுற்றுள்ளது.

இதனையொட்டி, நகரில் கடந்த சில தினங்களாக, அரிசியின் விலையும் 'ஓரளவு' உயர்ந்துள்ளது.

சர்க்கார் ஊழியர்களுக்கும் புதிய உரிமை

சென்னை சர்க்கார் ஊழியர்கள் தங்கள் குறைகளை சர்க்காருக்கு எடுத்துரைத்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென 'குழு' அமைத்துக்கொள்ளலாம் என்று சென்னை சர்க்கார் புதிய உரிமை ஒன்று வழங்கியிருக்கிறதாகத் தெரிகிறது

சர்க்கார் ஊழியர்கள் தங்களுக்கென தொழிற் சங்கங்கள் அமைத்துக்கொள்ள உரிமை கிடையாது; அதற்குப் பதிலாகத்தான் இவ்விதமான ஒரு 'குழு' அமைத்து, தங்கள் குறைகளை சர்க்காருக்கு எடுத்துச் சொல்லலாம் என்னும் நோக்கத்துடனேயே மேற்படி 'உரிமை' அளிக்கப்பட்டுள்ளதாம்.

உடனே தேவை

கீழ்க்கண்ட ஊர்களில், 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை:—

தஞ்சாவூர்
பெங்களூர்
செங்கற்பட்டு
திருநெல்வேலி
மாயவரம்

பொறுப்பாளர், 'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.